**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.348/2020</u>**

**நாள்– 25.08.2025**

**வா.சா. 2 – திரு. <u>M.ராமசாமி</u>**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

1) பட்டைக்காரர் ராஜேந்திரன் முதல் நீரை எடுத்தது எந்த தேதியில் என்றால் இந்த வழக்கிற்கு சில வருடங்களுக்கு முன்பு ஆகும். பட்டயக்காரர் என்பவர் ஊரில் முக்கியமான நபர் என்றால் சரிதான். மேற்படி தகராறு குறித்து தீர்மானம் ஏதும் போடப்பட்டதா என்றால் இல்லை. தற்போதைய வழக்கின் முதல் வழக்கு மூலம் எந்த தேதியில் என்றால் 2015ம் ஆண்டு தேதி ஞாபகமில்லை. புவனேஸ்வரி என்ற பெண்ணுக்கும், விஜயகுமார் என்ற போயர் சமுதாயத்தைச் சேர்ந்த ஆணுக்கும் ஏற்பட்ட திருமணத்திற்கு பின்னிட்டு பிரச்சனை ஏற்பட்டதா என்றால் முன்பே ஏற்பட்டது. எனது பிரமாணப் பத்திரிக்கையில் பத்தி 15 ல் சொல்லப்பட்டுள்ள 24.02.2015 அன்று திருச்செங்கோடு தாசில்தாருக்கு பொய்யான தகவல்களைக் கொண்டு ஒரு புகாரினை பிரதிவாதி கொடுத்தார் என்று சொல்லும் நிலையில் அந்த புகாருக்கு பின்புதான் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் அதற்கு முன்பே பிரச்சனை ஏற்பட்டுவிட்டது. 24.02.2015 தேதியில் கொடுக்கப்பட்ட புகார், கோவில் பிரச்சனை குறித்து கொடுக்கப்பட்டது ஆகும். 10.01.2015 தேதியில் தான் மேற்படி திருமணம் குறித்த பிரச்சனை ஏற்பட்டது, அதன் பின்னிட்டுதான் இந்தக் கோவில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. 24.02.2015 பின்பு அந்த புகார் சம்பந்தமாக அமைதிக் கூட்டம் நடந்தது என்றால் சரிதான். மேற்படி அமைதிக் கூட்டம் அந்தத் திருமணம் தொடர்பாக ஊரைவிட்டு அவர்களை ஒதுக்கி வைத்தது சம்பந்தமாக நடந்தது என்றாலும் மேற்படி அமைதிக் கூட்டம் கோவில் பிரச்சனைக்கு ஏற்பட்டதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) மேற்படி அமைதிக் கூட்டத்தில் இருதரப்பினரும் எந்த பிரச்சனையும் ஏற்படுத்தாமல் அமைதியான முறையில் கோவில் திருவிழாவையும், சாமி கும்பிடும் நிகழ்ச்சியையும் நடத்திக் கொள்ள வேண்டும் என்றும் முச்சலிகா எழுதப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாவா கோவிலில் மற்ற பிரதிவாதிகளைத் தூண்டிவிட்டு சிலை மற்றும் வேல் கம்புகளை வைக்க முயற்சி செய்தது குறித்து புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம், எங்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் பள்ளிபாளையம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. அந்த புகார் சம்பந்தமான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு புகார் ஏதும் கொடுக்கப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) 05.03.2015 அன்று பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு வந்து பொங்கல் வைக்க முயற்சி செய்ததை நானும் மற்ற டிரஸ்டிகளும் தடுத்துவிட்டோம் என்பது வருவாய்த்துறையினர் முன் ஏற்படுத்தப்பட்ட முச்சலிகாவிற்கு எதிரானது என்பதால் அவ்வாறு பிரதிவாதிகளை நாங்கள் தடுத்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என்ன சட்டவிரோதமான செயல்களை செய்தார்கள் என்றால் கோவில் நிர்வாகத்தில் தலையிட்டது ஆகும். கோவில் நிர்வாகம் என்னிடம் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 10.01.2015 தேதியில் ஏற்பட்ட தகராறின்போது தாவா கோவில் உள்ளே புகுந்து அங்கிருந்த ஊருக்குப் பொதுவான ஆவணங்களை எடுத்துவந்து அது எங்களிடம் தான் உள்ளது என்று பொய்யாகக் கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி ரிட் மனு எண்.6547/2016ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பது தவறு என்றால் சரியல்ல. மேற்படி ரிட் மனுவில் இருதரப்பினரையும் அழைத்து போதிய பாதுகாப்பு கொடுத்து திருவிழாவை நடத்த வேண்டும் என்பதுதான் உத்தரவு என்றால் சரிதான்.

4) தாவா கோவில் பழைய சர்வே எண் 93/22 ல் தான் இருந்தது என்றால் சரியல்ல, அது வேம்பு விநாயகர் கோவிலுக்கு உரியது. சர்வே எண்.93/22ன் தற்போதைய சர்வே எண் தான்.561/12 என்றால் சரிதான். தாவா கோவில் கணக்கு வழக்குகளை நான்தான் பார்த்தேன் என்றால் சரிதான். கணக்கு வழக்குகளை நான் பார்த்ததாக வா.சா.ஆ.6 முதல் 9 வரை உள்ளதில் குறிப்பிட்டு கண்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்களில் நான் கணக்கு பார்த்ததாக கையொப்பம் இட்டுள்ளேனா என்றால் இல்லை. முழு வரி, அரை வரி போன்ற கணக்குகள் தாவா கோவிலுக்கு உண்டு என்றால் உண்டு. அனைத்து சமுதாயத்தினரிடமும் முழுவரி , அரைவரி வசூலித்தது உண்டு என்றால் சரிதான். நிர்வாகஸ்தர் என்ற முறையில் அரைவரி, முழுவரியை விட அதிகம் கொடுத்தேனா என்றால் கோவில் செலவுகளுக்கு தேவைப்பட்டால் கோவில் நிர்வாகஸ்தர்கள் என்ற முறையில் மூன்று குடும்பங்களும் பணம் கொடுப்போம். வா.சா.ஆ.7ல் பக்கம் 140ல் அனைவர் போல் நானும் ரூ.350/- 2008-09ற்குரிய வரி செலுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். இதேபோல் அனைத்து ஆண்டுகளும் வரி கொடுப்போம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 முதல் 9ல் நிர்ணயிக்கப்பட்ட வரியைவிட அதிகமாக நான் கொடுத்ததாக கண்டுள்ளதா என்றால் இல்லை, கோவில் செலவுக்குத் தேவைப்பட்டால் கொடுக்கும் பணத்தை இதில் குறிப்பிடமாட்டோம். நான் அவ்வாறு சாட்சியமளிப்பது பொய் என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.7ல் பக்கம் 190ல் கண்டுள்ளது வயல் ஏலம் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை விடப்பட்டதற்கான கணக்கு என்றால் சரிதான். அதில் செங்கோடன், சென்னியப்பன், சித்தன், கண்ணையன், துரைசாமி, மணி

ஆகியோர் ஏலம் எடுத்ததாகவும் அவர்களிடம் தொகை வசூலிக்கப்பட்டதாகவும் கண்டுள்ளது என்றால் சரிதான். நிர்வகஸ்தர் அல்லது தர்மகர்த்தா என்று எழுதி கையெழுத்து போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, 1ம் வாதியின் பங்காளிகளுள் ஒருவர் கையொப்பம் இட்டுள்ளார். அவர் மேற்படி வழக்கில் தரப்பினர் இல்லை. கோவிலுக்குப் பாத்தியப்பட்ட காடுகள் தற்போது யார் வசம் உள்ளது என்றால் கோவில் நிர்வாகத்தால்தான் விவசாயம் செய்யப்படுகிறது. அந்த காடுகளில் இருந்து வரும் வருமானத்தை கோவிலுக்கு பயன்படுத்துவதற்கான கணக்கு வழக்கு ஏதும் இல்லை என்றால் சரியல்ல, ஆவணங்கள் உள்ளன. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு கணக்கு வழக்கு இல்லை என்பதால்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) தற்போது கோவில் கணக்கில் இருப்பு ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.7 பக்கம் 76ல் 2011ம் வருடம் வங்கியிலுள்ள இருப்பு ரூ.122995/– உள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். அதற்கு பின் கோவிலுக்கு முன்மண்டபம் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. மேற்படி ரூ.122995/– ற்குரிய கணக்கு வழக்குகளை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோவில் நிர்வாகஸ்தர் என்று கூறி கோவில் வரவுகளை துஷ்பிரயோகம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் கோவில் நிர்வாகஸ்தர் இல்லை என்பதால்தான் சரியான கணக்கு வழக்குகளைக் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கோவிலுக்கு அனைவரும் வரி செலுத்துவதால் கோவில் நிர்வாகத்தில் பங்கு கொள்ள அனைவருக்கும் உரிமை உண்டு என்றால் சரியல்ல.

7) மூன்று பங்காளி குடும்பங்களில் ஒரு சுப்புக் கவுண்டர் குடும்பத்தை தரப்பினராகச் சேர்க்கவில்லை என்றால் சரிதான், L.ராமசாமி மூத்த குடும்ப வாரிசு என்பதால் அவர் மட்டுமே வழக்கு தாக்கல் செய்துள்ளார் ஒரு சுப்புக் கவுண்டர் குடும்பத்தை தரப்பினராகச் சேர்க்கவில்லை. சுப்புக் கவுண்டர் குடும்பத்தையும், வரதப்பக் கவுண்டர் குடும்பத்தையும் இந்த வழக்கில் தரப்பினராகச் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா கோவில் எங்கள் பங்காளிகளுக்கு உரியது என்பது பொய் என்றாலும் அதைக் காட்டுவதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 1ம் வாதி தர்மகர்த்தா என்பது வழக்கிற்காக பொய்யாக கூறப்படுகிறது என்றால் சரியல்ல. அமைதிக் கூட்டத்திற்கு விரோதமாக பிரதிவாதி சமூகத்தினர் கோவில் வழிபடுவதை தடுத்து வருகின்றோம் என்றால் சரியல்ல. நிர்வாகஸ்தர் என்ற முறையில் கோவிலுக்கு வரும் நபர்களுக்கு எந்த இடைஞ்சலும் தராத வகையில் நாங்கள் முறைப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின்

நிர்வாக சுவாதீன உரிமை எனக்கு உரிமையானது அல்ல என்றால் சரியல்ல. தாவா கோவில் ரங்கனூர் மக்கள் அனைவருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நிர்வாகத்தில் பிரதிவாதிகள்அல்லது மற்ற பொது மக்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை.)**